உ

கடவுள்துணை.

திருச்சிற்றம்பலம்.

பஞ்சாட்சரப்பதிகம்.

நடராஜப்பத்து.

ஜோதிமயம்,

சங்கப்புலவர் கண்டசுத்தி

இந்நான்கும் அடங்கியிருக்கின்றன.

சென்னை-வெளக்கார்பேட்டை,

பூ. ரா. அப்பாதுரை முதலியார்

அவர்களால் பிரசுரிக்கப்பட்டது.

சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப் பட்டது.

இதன் விலை] 1923. [அணா 1

உ
கடவுள் துணை.
திருச்சிற்றம்பலம்.

பஞ்சாட்சரப்பதிகம்

நடராஜப்பத்து.

ஜோதிமயம்
சங்கப்புலவர் கண்டசுத்தி
இந்நான்கும் அடங்கியிருக்கின்றன.

சென்னை-சௌக்கார்ப்பேட்டை
பூ-ரா-அப்பாதுரை முதலியார்
பிரசுரிக்கப்பட்டது.

சென்னை,
ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது

1923.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பர நடராஜர்

பஞ்சாட்சரப்பதிகம்.

வசியசிவசங்கரா வசியகெங்காதரா வசியகைலாசவாசா, வசிய
பணியணியுரா வசியமான்மழுகரா வசியசிவகாமிநேசா, வசியதிரு
நேத்திரா வசியபுவனேஸ்வரா வசியஓம்நடனபாதா, வசியகரியுரிய
முக வசியபுலியிடையமுக வசியசிரமாலையமுகா, வசியமதிமுடியமுக
வசியபசுபதியமுக வசியவெண்மனதில்பாசா, வசியமுன்னூலமுக
வசியவெண்ணீறமுக வசியமறைபரவுமமுகா, வசியவெனயுனை யனு
தினம் போற்றுமடியார்க்குனருள் மறைதிரந்ததில்லை, அதிபதிஜன
காதி துதிபதிசிவகாமி அன்பினுரை நடனபதியே. 1

சிவயநமவென்றுதின மூழ்கியுருவேற்றுவார் செய்தொழிலெல
லாம் வசியமாம், ஜெகவசியமாம்சகல முகவசியமாம்செய்த சித்துக
ளெலாம் வசியமாம், வயநமசிவென்றுவுரு மாட்டுவார்சத்ராதி வா
ரைவிட்டபந்தாம், வடங்காதபூதபே தம்பசாசினைவெல்லாம் வள
ர்குலாலன் திகிரியாம், யநமசிவ வபநமசி சிவபனம வெல்லாமுன்
னடலமன்றோ, யிவ்வுலகபொருளுதவி அவ்வுலகமருளுதவியவிரு
தெய்வமுனவோ, அவுறுதிபுவனுதி சௌனுதி முத்தர்க்கு அருள்
மறை திறந்தில்லை,அதிபதிஜெனகாதிதுதிபதிசிவகாமி அன்பினுரை
நடனபதியே. 2

புல்லாய்ப்பிறந்தாலு மிருகாதிஜெனனங்கள் பசியாறிமகிழுமன்
றோ, பூண்டாய்ப்பிறந்தாலும் புலத்தியர்கள்கொண்டுசில பிணிதீர்த்து
புகழ்வரன்றோ, கல்லாய்ப்பிறந்தாலும் வல்லவர்கள் பிதிமெகாண்டு
சாட்சிக்குருத்து மன்றோ, கழுதையுருவந்தாலும் ஆவெனக்கத்தி
னல் கைகண்ட சகுனமென்பார், எல்லாமிலாமலே யிப்பிறவிதந்
தெனை யெங்கவிட்டகலலின்றாய், எத்தனை அன்னையின் எத்தனை
தந்தையின்னெத்தனை பிறவிவருமோ, அல்லலெலு மாசறுத்தாட்
கொளுந்தெய்வமே அப்பனே தில்லைநகர்வாழ், அதிபதிஜெனகாதி
துதிபதி சிவகாமி அன்பினுரை நடனபதியே. 3

கல்லர்தமுடனைக் கயவரைக்காமுகரைக் கல்னெஞ்சவஞ் சரிவ
ரை, கற்றுமறிவில்லாத மோழையைக் கோழைபைக் கார்க்கவைத்
துண்டபேரை, பொல்லாத மூர்க்கரை மிருகங்கள் போன்றவரை
பொய்க்கு அஞ்சாதபேரை, பூமிபிற்பிறருக்கு யிடுக்குமயல்வோர்
களை பிணமொத்த பேரைபரை, நல்லோரெனக்கவிகள் சொல்லி
யல்லாமல் நானுளாவதென்றுசிவமே, நானன்றிநீயேது நீயன்றினு
னேது நானுபுரைத்ததேது, அல்லிரும்பகலினும்பியிலாதசைவேது

அருள்மடை திறந்ததில்லைக், கதிபதிஜெனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடனபதியே. 4

ஜெகமெட்டு திசைகளுங் கிரிகள்பல தெய்வமும் செம்பொன் மணிமாடமேடை, சேயன்னை தந்தையும் நானென்ற ஆணவஞ் செல்வமும் வல்லசித்தும், முகமேடுமெமனுக்கு முன்வந்து உதவுமோ முத்திக்கு வித்துமுளதோ, மூவாசைவிட்டுவலி சருகாதிதின்றும் முன்செய்த வினையகலுமோ, யிகமுனியகசுகமேபாகம் ஈசனீ காலூன்ற யிருளேது வெளியேது நினைவேது கனவுமேது, அகவுறவு பற்றற்று துறவுறவு முற்றற்று ஆரியர்கள் பரவுநில்லே, அதிபதி ஜெகநாதி துதிபதிசிவகாமி அன்பிலுறை நடனபதியே. 5

திருச்சிற்றம்பலம்.

நடராஜப்பத்து.

மண்ணாதிபூதமொடு விண்ணாதி அண்டம்நீ மறைநான்கின் அடிமுடியும்நீ, மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ அனலும்நீ மண்டல மிரண்டேழும்நீ, பெண்ணும்நீ ஆணும்நீ பல்லுயிர்க்குயிரும்நீ பிறவும்நீ யொருவநீயே, பேதாதிபேதம்நீ பாதாதிகேசம்நீ பெற்றதாய் தந்தைநீயே, பொன்னும்நீ பொருளும்நீ யிருளும்நீ ஒளியும்நீ போதிக்கவந்தகுருநீ, புகழொணாகிரகங்கள் ஒன்பதும் நீயிந்த புவனங்கள் பெற்றவனும்நீ, என்னாளியஜீவகோடிகளீன்றவப்பனே என்குறைகளார்க் குரைப்பேன், யீசனே சிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 1

மானாடமழுவாட மதியாட புனலாட மங்கைசிவாமிகாமியாட, மாலாடநூலாட மறையாட திரையாட மறைதந்தபிரமனாட, கோனாட வானுலகு கூட்டமெல்லாமாட குஞ்சரமுகத்தனாட, குண்டல மிரண்டாட தண்டைபுலியுடையாட குழந்தை முருகேசனாட, ஞானசம்பந்தரொடு யிந்திரர்பதினெட்டு முனியட்ட பாலகருமாட, நரைதும்பை யறுகாட நந்திவாகனமாட நாட்டியப்பெண்களாட, வினையோட உனைபாட யெனைநாடியிதுவேளை விருதோடி ஆடிவருவாய் யீசனே சிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 2

கடலென்ற புவிமீதில் அலையென்ற வுருகொண்டு கனவென்ற வாழ்வைநம்பி காற்றென்ற கும்பிக்கி உணவென்றபிரைதேடி ஓயாமலிரவு பகலும், உண்டுடுறங்குவதை கண்டதேயல்லாது ஒருபய னடைந்திலேனை, தடமென்றமிடிகரையில் பந்தபாசங்களை

ளம் தாபரம் பின்னலிட்டு, தாயென்றுசேயென்று நீயென்று நானென்று தமியேனை யிவ்வண்ணமாய், இடையென்று கடைநின்று பேயனென்று சோளாதிருப்பதுன்னழகாகுமோ, யீசனே சிவகாமி நேசனே யெனையின்ற தில்லைவாழ் நடராஜனே. 3

பம்புருனியமல்ல வைப்பல்லமாரணந்தம்பனம் வசியமல்ல, பாதாளவஞ்சனம் பரகாயபுரவேச மதுவல்லசாலமல்ல, அம்புக்குண்டுகள் விலகவொழியு மந்திரமல்ல ஆகாயகுளிகையல்ல, அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல அறிபமோகனமுமல்ல, கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிர்ம்மரிஷி கொங்கணர் புலிப்பாணியும் கோரக்கர்வள்ளுவர் போகமுனிவரெலாங் கூறிடும் வயித்தியமல்ல, எம்மனதுன்னடிவிட்டு நீங்காது நிலைநிற்கயேதுளவு புகலவருவாய், யீசனே சிவகாமிநேசன யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 4

நொந்துவந்தேனென்று ஆயிரஞ்சொல்லியும் செவிக்கென்ன மந்தமுண்டோ, நட்பநெறியாத பிள்ளையைப்பெற்றபின் நோக்காததந்தையுண்டோ, சந்ததமுந் தஞ்சமென் றடியைப்பிடித்தபின் தளராதநெஞ்சமுண்டோ, தந்திமுகனறுமுகன் யிருபிள்ளை யில்லையோ தந்தைநீமலடுதானே, விந்தையுஞ்ஜாலமும் உன்னிடமிருக்குதே வினையொன்றுமறிகிலேனே, வேதமும்சாஸ்திரமும் உன்னையே புகழுதே வேடிக்கையிதுவல்லவோ, யிந்தவுலகீரேழு மேனளித்தாய் சொல்லுமினி யுன்னைவிடுவதில்லை, யீசனேசிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ்நடராஜனே. 5

வழிகண்டு உன்னடியைதுதியாதபோதிலும் வாஞ்சையில்லாதபோதும். மாலாயமாய்க்கோயில் சுற்றாதபோதிலும் வஞ்சமே செய்தபோதும், மொழிபெகனைமொகனை யில்லாமலேபாடினும் மூர்க்கனே முகடாகிலும், மோசமேசெய்யினும் தோமேகவரினும் முழுகாமியேயாகினும், பழியெனக்கல்லவே தாய்தந்தைக்கல்லவோ பார்த்தவர்கள்சொல்லார்களோ. பாரறியமனைவிக்கி பாதியுடலிந்துநீ பாலனைக்காக்கொணாதோ, யெழில்பெரிய அண்டங்களடுக்காயமைத்தநீ யென்குறைகள் தீர்த்தல்பெரிதோ, யீசனே சிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 6

அன்னைதந்தைகளென்னை யீன்றதற்கழுவனோ அறிவிலாதற்கழுவனோ, அல்லாமல்நான்முகன் தன்னையேநோவனோ ஆசை மூன்றுக்கழுவனோ,முன்பிறப்பென்னவினைவந்து மூளுமென்றழுவனோ முத்திவருமென்றுணர்வனோ, தன்னைநொந் தழுவனோ உன்னை நொந்தழுவனோ தவமென்னவென்றழுவனோ, தையலர்க்கழுவனோ மெய்வளர்க்கழுவனோ தரித்திரதிசைக்கழுவனோ, இன்னமென்னப்பிறவி வருமோவென்றழுவனோயெல்லா முரைக்கவருவாய், யீசனே சிவகாமி நேசனேயெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 7

காயமுன்மரமீது பூபிஞ்சறுத்தனோ கன்னியர்கள் பழிகொண்டனோ, கடனென்று பொருள்பறித்தே வயிறெரித்தனோ கிளைவழியில் முள்ளிட்டனோ, தாயாருடன்பிறவி சென்னவினைசெய்தனோ தந்தைபொருளில்லையென்றனோ தானென்று சொர்வித்துசொல்லகளவு செய்தனோ தபசிகளை யேசினேனோ வாயாரபொய்சொல்லி வீண்பொருள்பறித்தனோ வானவரைப் பழித்திட்டனோ, வடவுபோலே பிறரை சேர்க்காதடித்தனோ வந்தபின் யென்செய்தனோ, ஈயாத லோபியென்றேபெயரெடுத்தனோ, யெல்லாம் பொறுத்தருளுவாய், ஈசனே சிவகாமிநேசனே யெனையின்ற தில்லைவாழ் நடராஜனே. 8

தாயாரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன தம்பிரவியுறவுகோடி, தனமல்ல குவித்தென்ன கனபெயரெடுத்தென்ன தாரணியையாண்டுமென்ன, சேயர்க ளிருந்தென்ன குருவாய் இருந்தென்ன சிஷர்களிருந்துமென்ன, சித்துபலகற்றென்ன நித்தமும் விரதங்கள் செய்தென்ன நதிகளெல்லாம், ஓபாது மூழ்கினும்என்னபலன் எமனேலை ஒன்றைகண்டுத்தடுங்க, உதவுமோயிதுவெலாம் சந்தை உற வென்றுதான் உன்னிரு பாதம்பிடித்தேன், யார்மீதுவுன்மனமிருந்தாலுடன்கடைக் கண்பார்வையதுபோதுமே ஈசனேசிவகாமிநேசனே யெனையின்ற தில்லைவாழ் நடராஜனே. 9

இன்னமுஞ்சொல்லவோ உன்மனங்கல்லோ இரும்போபெரும் பாரையோ, யிருசெவியுமந்தமோ கேளாது அந்தமோ யிதுவுனக்கழகுதானோ, யென்னன்னையோகமோ யிதயென்ன சோபமோ யிதுவேவுன் செய்கைதானோ, உன்னைவிட்டெங்ன்சென்றாலும் விழலாவனோ உனையடுத்துங் கெடுவனோ, ஒயோவிதின் குற்ற மென் குற்ற மொன்றுமில்லை யுற்றுபார், பெற்றவையா என்குற்றமாயினும் உன்குற்றமாயினும் யினியருளளிக்கநினைவாய், ஈசனே சிவகாமி நேசனே யெனையின்ற தில்லைவாழ் நடராஜனே. 10

சனிராகுகேதுபுதன் சுக்கிரன் செவ்வாய்குருச் சந்திரன் சூர்யருவரை, சற்றெனக்குள்ளாக்கி முசிபனி ரெண்டையும்சயமாய் நிறுத்தியுடனே, பனியொத்த நக்ஷத்திரங்க ளிருபத்தேழும் பக்குவப்படுத்தி பின்னால், பகர்கின்ற கரணங்கள் பதினொன்றையும் வெட்டிபாரையும்அதட்டி யென்முன், கனிபோலவேபேசி கெடுநினைமினைக்கின்ற கசடர்களையுங்கசக்கி, கர்த்தனின் தொண்டராம் தொண்டர்க்குத தொண்டரின் தொண்டர்கள் தொழும்பனுக்கி இனியவளமருவு சிறுமணவை முனிசாமி யெனையாள்வதினி யுன்கடன்காண் ஈசனே சிவகாமிநேசனே யெனையின்ற தில்லைவாழ் நடராஜனே. 11

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஜோதிமயம்.

இந்திராதி முதன்முனிவர் கொண்டாடுசோதி யெண்டிசைகா
ணவோங்குசோதி, யிமையபர்வதவல்லி கண்கண்டசோதி யென்
னிருவினைபகைக்கும்சோதி சாலோகசாமீப சாருபமளவிடா சாயுச்ய
சோதியிதுவே, சிந்தையில் நினைப்போதா ஜம்பூகசாட்சியாய் தெரி
சனஞ்செய்தபேர்க்கு, செய்தவினையேவக்கொடு ஞன்யமுதல்பிணி
யெலாஞ் சென்மாந்திரத்து மறவாத, நந்தியொடுபுலியா மூவாயிரம்
பேருநான்முகனும்விண்டுதேடவே, நற்சித்சோதிற்சோதி நவசோதி
சிவசோதி யென்னம்மைசிவ காமியுரவே. 1

பருதிமதிதிருவலம்செய்துத் தொழுஞ்சோதிபங்கயன் வணங்
குசோதி, பாரவக்கோன் தேடிகாணாதசோதியது பார்ப்பதிக்கண்
டசோதி, சரியைகிரியாயோக ஞானமோ நத்தவர்கள் சதாநிஷ்டை
செய்யுஞ்சோதி, ஜனகாதிமுனிவர்மன மகலாதசோதியது சச்சிதா
நந்தசோதி, கிரிவானையெண்பத்து நான்குலட்சஞ்ஜீவ பேதத்துயர்
ந்தசோதி, வினைப்பயகரிந்தந்த சருவிடைப் போக்கியே வேடிக்கை
பார்க்குஞ்சோதி பருவமதியிரவியொடுபங்கயனுமிந்ராதிபார்க்கவே
கனகசபையில், பண்டுநடனச்சோதி விண்டுபரவுஞ்சோதி தில்லைச்
சுயஞ்சோதியே. 2

பிஞ்சுமதிநதியை முடிமேற்பூண்ட ஜோதியாம் பணிமேலணி
ந்தஜோதி, பேரிசரிபறையடியு நடுமுடியுமாஞ்ஜோதி பெண்கொடி
மணந்தஜோதி, அஞ்செழுத்தாய்பஞ்ச பூதமாயென்னுடற் காதா
ரமானஜோதி, அகிலபுவனங்களும் திக்குத்திகந்தமும் அங்கிங்
கெனாத ஜோதி, தஞ்சமனுபடியாது நெஞ்சைத் திரித்தியே தன்
னருட்காட்டுஜோதி தந்தைதாய் குருதெய்வம் தாரமாய் மகவு
மாய் தனுமாயோங்குஜோதி, கஞ்சனெடுவிஞ்சையமு மஞ்சவே
கொஞ்சலோடு கனகசபை மீதாளும், கதித்தப்பெருஞ்ஜோதி
துதிக்கப் பெருஞ்ஜோதி கனகசபைசிவஜோதியே. 3

ஜாதிமதபேதமாம் சமுக்கற்றமுநியோர் சமுகத்திலங்குஜோதி
சதுர்மறையும் வேதமொடு தொண்ணூற்றியாறு தத்துவமெலாம்
நின்றஜோதி, சோதிமலைமீதிற்சாஞ் ஜோதியாய்நின்ற சோதித்
தழைக்குஞ்ஜோதி, சும்மாவிருக்கும் சுகங்கண்ட மௌனியொடு
சும்மாவிருக்குஞ்ஜோதி, நீதிபலபேசிமத வாதமிடுமடையாதநெஞ்
சைப்பிளக்குஞ்ஜோதி, நின்றநிலைநின்றட்ட திக்கெலாமிரவு பகல்
நிர்த்தமிடுகெடியஜோதி; மாதுமலைமங்கையொடு ஆதிசபைமீதில்
தளர்மந்திபஜோதி, மதிசோதிரவிஜோதிசிவஜோதி தவசோதி
மங்கைசிவ காமிபுரவே. 4

மாசிலாவாகம புராணமறையாஞ்சோதி மகவாயுதித்தஜோதி, மன்னனது கிரிகையைத் தள்ளவென்றச்சோதி மலைமகள்தழுவு ஜோதி, தேசமிடமாம்பொருள் வற்றவற்றாஞ்சோதி தென்னவனை வீழ்த்தஜோதி, தேவரிந்திரன்முனிவர் அமரர்கின்னரருகர் தேடக் களித்தஜோதி, ஆசைவன்பாசமா மாயாசரக்கருணை யமுதன்பற் குதவுஜோதி, அன்பாம்பணிப்பூண்டு சிவசிவவெனத்தேம்பு மவர்க் கோடிக்கசோதி, மாசின்மலசோலைகுளிர் தீம்புனற்றில்லை மந்திரச் சபையிலென்றும், மதிஜோதி ரவிஜோதி சிவஜோதி தவஜோதி மந்த்ரத்துசயஞ்ஜோதியே. 5

திருச்சிற்றம்பலம்.

கண்டசுத்தி.

விருத்தம்.

பணந்தேடி யாரிருந்தா ருலகமீதில்
  பாவிநிரி யோதிரனும் பாட்டனாரும்
குணமான துரோணரவர் கருணன்பூரி
  கூறியதோர் தேர்நாசன் சகுனிசல்யன்
பிணமானா ரருச்சுனன்கை யம்பினாலே
  பெண்டிரும் பணங்காசும் பிறர்கைபோச்சோ
மணமான வாழ்வுபொரு ளாடுமாடும்
  மாய்கையடா பொம்மல்லாட்டம் மதித்துப்பாரே.

ஆலித்தரைமூழ்ந்து அபிராமன்மீது அனங்கனுற்றான்
பாலிக்கும்போது யென்செய்குவான் பஞ்சபாணனம்பு
தாலிக்குமே பழந்தட்டுக்குமேதளித் தழும்புபட
கூலிக்குமேவெட்டும் பெருமானிரவி குலோத்துங்கனே.

காண்டகண்டத்தொனிக் கஞ்சியமான்கருங் கங்குலிலே
திரண்டவெள்ளத்தின் பிணமீதுசென்றனள் சேர்ந்தவனை
அரண்டவின்பங்கொண்டு மீளக்கரம்பற்ற அங்கொருசால்
குரண்டகன்னத்தி னுதைத்தனள் காணுங்குலோத்துங்கனே.

கடிமலர்பந்துகொண்டு கணவனும் கைக்கொண்டோச்ச
இடியெனச்சோர்ந்துவீழ்ந்தாள் யெழுமுலைக்கொடியினல்லாள்
முடியதமுடவன்கையால் அரசன்முன் சுத்திக்கொண்டு
அடிபடக்கண்டதல்ல இது அம்பலத்ததிசயந்தான்.

வாரிடைபிடுங்கிமுட்டி வளரிளங் கொங்கைநல்லாள்
நீர்விழிகண்கள்சோர நேரினை யெழுந்துசென்றாள்

மார்சிகைதன்னைப்பற்றி மற்றவனடியும்பட்டு
ஆர்புறத்தழுவிகொண்டான் இது அம்பலத்ததிசயந்தான்.

கம்பத்தூணாட்டி கனகவிளக்கெரிய
செம்பொன் அமளியின்மேல் சேராபல்செம்புருள
புல்லூறல்மாறி புகைச்சால் புகைந்தனளே
கல்லுருள முத்துருளக்கண்டு.

சொன்னசொற்கேளாவேந்தன் துடியிடைமடவாள்கையில்
மன்னவன்கழுத்தறுக்க மனமதுதுணிந்துவிட்டான்
தென்னிலைவேலனோ திருத்தணிமலையில்வாழும்
அன்னையும்நீரும்வந்து யென் அரசனையெழுப்பிவிடீரே.

சாதிமார்க்கந்தவிர்ந்து ஊறைதவுனின்ற தாயினைதனக் கழுவ னே, கடம்பெரியமைந்தனைத் தனியவைத்தேவேந்தன் தலைகொய் ததற்கழுவனே, ஆதிநாள் தாலிதந் தாரியறனைக்கொன்ற அரவனு க்கேனழுவனே, அக்கானகம்புகுந்து மறுமன்னர்வூர்வேசி யா தற்கேனழுவனே, வேதநூல்முறையிலா மைந்தனைத்தழுவியே வெந்தணலுக்கு நானழுவனே, வெள்ளம்பிறந்தமேதள்ளாடியிடை யரிடம் விட்டதற்கேனழுதேனே, ஈசனே சிவகாமிநேசனே யெனை யீன்ற தில்லைவாழ்நடராசனே.

அன்றுயென்னன்னையுக் தந்தையுங்கூடியே யனுபவிப்பது ஞ்சஞ்சலம், அங்கொருஜலத்துளி தரிப்பதும்சஞ்சலம் தரித்தத ற்பின் ஆனாதுஞ்சஞ்சலம், பெண்ணையுமண்ணையும் விரும்புவ தும்சஞ்சலம் பெண்டிலாதிருப்பதுஞ்சஞ்சலம், பெற்றமகனில்லா திருப்பதுஞ்சஞ்சலம் பெற்றபின்புஞ்சஞ்சலம், என்றுதான்சஞ்ச லம் ஒழிந்துபான் தொழுங்கருணை உன்திருவடிக்காளவனே, வள் ளிதெய்வானையுடன் வாழுமயிலேறியே வரவேண்டுமெந்தனருகே.

தெலுங்கருளி சென்றுதமிழ் பாடினால்மாகு அரவம்தெலியது ஓசிச்சிபடா பென்பராம், நீவுசெப்பேபதிகிந்தலோருள்வேசி திப்பி னட்டுந்தி செப்பலேதேயென்பராம், அலங்கொடு துலுக்கர்தாம் இரவில் அச்சானைதமாரி பாஞ்சோதவென்பராம், துலுக்கும்கன்ன டர்கடாம் குந்தாமததோதுமது தெளிந்திவிந்தெளிததல்லவோ, ஒக்துகாகாருகொட்டா கன்னிவோவோவென்பரும், நிலையானபுவி யாளும் இங்கிலீஷ்காரரும் டமிழ்சீநாகோவென்பராம், இவரெலாம் இத்தமிழ்க்குரியராவரோ வேண்டுமென் அற்புதநடராசனே.

திருச்சிற்றம்பலம்

